## மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு – 2017

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலைக் கணிப்பிடும்போது ஆண்டிற்கான செயற்பாட்டு இலாபத்தில் உள்ளடங்கியிராததும் உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுமான முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் மற்றும் ஆரம்ப மீதி வேறுபாடாகிய ரூபா 1,352,722 செயற்பாட்டு இலாபத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 3,764,893 அதிக / குறைவான நிதியேற்பாடு சீராக்கல் ஆகக் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் பிற்போட்ட வருமானமாக ரூபா 10,287,724 விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தபோதும், செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும்போது ரூபா 312,225 மாத்திரமே இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) நிலையான சொத்துக் கொள்வனவிற்குத் திறைசேரி வழங்கிய மூலதன மானியம் ரூபா 9,627,424 ஆகும். இது நிதிசார் நடவடிக்கைகளின் கீழ் காசுப் பிரவாக வருகையாகக் காட்டப்படவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றினது மற்றும் இணைந்த எதிர்கால நலன் அல்லது சேவைகளின் சாத்தியக்கூறு நிறுவனத்தை வந்தடையும் நிலை உள்ளவிடத்து அதனைச் சொத்தாக கணக்கிடலாமெனினும், அதற்கு மாறாக எட்டாவது மாடி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2016, 2017 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட முறையே ரூபா 1,315,075 மற்றும் ரூபா 8,454,616 என்பன மீண்டுவரும் செலவினமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டினது பற்றாக்குறை ரூபா 1,315,075 அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின்து மிகை ரூபா 8,454,616 குறைவாகக் கணிப்பிடப்பட்டுமிருந்தது.

(ii) நிதிப் பிரிவின் அலுவலகத்தை இரு கூறுகளாகப் பிரிக்கும் (Partition) செலவினமாகிய ரூபா 194,500 மூலதனமாக்கப்படாது கட்டிடப் புனரமைப்புச் செலவாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களுக்கான 5.2 ஆம் இலக்கக் குறிப்பின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய மூலதன மானியப் பெறுவனவுகள் பிற்போட்ட வருமானமாக இனங்காணப்படுவதாக குறிப்பிடப்பட்டபோதும், ஆண்டின்போது நிலையான சொத்துக் கொள்வனவிற்குப் பெறப்பட்ட மூலதன மானியமாகிய ரூபா 9,627,424 ஆகியபோதும், அது ரூபா 9,975,499 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு பயன்படுத்திய "திபஸ்" கணக்கீட்டு பெக்கேஜ் 2017 மே 09 தொடக்கம் செயலற்றுப் போனமையால் புதிய கணக்கீட்டு பெக்கேஜ் பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதன்போது பழைய பெக்கேஜின் மூலம் 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற 03 மாதங்களுக்குப் பெறப்பட்ட பரீட்சை மீதியினது மீதியானது 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாக புதிய பெக்கேஜில் உள்ளடக்கப்பட்டுப் பெறப்பட்ட 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பரீட்சை மீதியுடன் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும், 2017 ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்களது மீதி, 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு முன்கொண்டுவரப்படும்போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இத் தவறான கணக்கீடு 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியின் பின்னர் நாட்குறிப்பின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்டிராமையால் அதன் மூலம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டிராது எனக் கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(i) முதல் 03 மாதங்களது 52 பேரேட்டுக் கணக்குகளது இறுதி வரவு மீதிகள் மற்றும் 31 பேரேட்டுக் கணக்குகளது இறுதி செலவு மீதிகள் 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான அப்பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப வரவு மற்றும் செலவு மீதிகள் என்பவற்றுக்கிடையே முறையே ரூபா 5,443,442 மற்றும் ரூபா 1,893,230 வேறுபாடுகள் நிலவியமை.

(ii) முதல் 03 மாத கால பரீட்சை மீதியில் உள்ளடங்கிய 67 வரவு மீதிக்கான ரூபா 11,960,433 மற்றும் ரூபா 7,920,373 கூட்டுத் தொகையுடைய 25 செலவு மீதிகள் என்பன 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான பரீட்சை மீதியில் உள்ளடக்கப்படவில்லை.

(iii) முதல் 03 மாத கால பரீட்சை மீதியில் உள்ளடங்காத ரூபா 14,718,451 கூட்டுத் தொகையுடைய 15 வரவு மீதிகள் மற்றும் ரூபா 3,434,717 கூட்டுத் தொகையுடைய 10 செலவு மீதிகள் என்பன 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டமை.

(ஆ) சீராக்கல் கணக்கிற்கான மாற்றம் (Transfer for Adjustment Account) எனும் பெயரிலான தொங்கல் கணக்கு ஒன்றில் 17 சந்தர்ப்பங்களில் இனங்காணப்படாத ரூபா 1,086,305 பெறுவனவுகளும் 71 சந்தர்ப்பங்களில் இனங்காணப்படாத ரூபா 4,279,131 கொடுப்பனவுகளும் பதிவு செய்யப்பட்டு அக்கணக்கு மீதியாகிய ரூபா 3,192,826 வரவு மீதி வருமானக் கூற்றில் ஒப்பந்தச் சேவைகளின் கீழ் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது. இப் பெறுவனவுகளுக்கும் கொடுப்பனவுகளுக்குமுரிய பெறுவனவும் பற்றுச்சீட்டு, விலைப்பட்டியல், உறுதிச் சான்றுகள் போன்ற சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததால் கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவுச் செவ்வைக்குள்ளாக்கியபோது புலனாகிய பின்வரும் விடயங்களின் காரணமாக கொடுக்கல் வாங்கல்கள் தவறின்றி கணக்கிலிடப்பட்டுள்ளதைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(i) கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் 240113 தொடக்கம் 240119 வரையிலானவற்றினது செலவினங்களின் கூட்டுத் தொகை ரூபா 78,990 ஆகியபோதும், அவற்றிற்குரிய காசோலைகள் வங்கிக் கூற்றிலும் காசேட்டிலும் ரூபா 92,500 ஆகக் கொடுப்பனவைக் காட்டியமையால் ஏற்பட்ட ரூபா 13,510 செலவின வித்தியாசத்தை இனங்காணாது மேற்படி தொங்கல் கணக்கில் வரவு வைத்தமை.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் 259919 என்பதன் மூலம் பெறப்பட்ட ரூபா 159,950 திறைசேரி மானியக் காசேட்டில் இருமுறை குறித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் தவறுதலாக மேற்படி மாற்றக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை.

(iii) நானாவித கடன் கொடுத்தோர் மற்றும் செலவினங்களுக்கு 05 காசோலைகள் மூலம் ரூபா 273,854 கொடுப்பனவு செய்யப்பட்டு காசேட்டிலும் திறைசேரி மானியத்திற்கான செயற்திட்டக் காசேட்டிலும் கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்டு மாற்றக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.

(இ) 2016 ஆம் ஆண்டின் கடன் கொடுத்தோர் மற்றும் நிலையான சொத்துக்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 312,500 பெறுமதியுடைய கணனிகளும் துணைப்பாகங்களும் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபரிலும் ஆணைக்குழுவை வந்தடையவில்லை. அதன் காரணமாக, நிலையான சொத்துக்களும் கடன் கொடுத்தோரும் அதேயளவு அதிகரித்திருந்ததுடன், நிறுவனத்தில் இல்லாத சொத்தொன்றிற்கு ரூபா 103,125 ஆண்டிற்கான தேய்மானமாக நிதியேற்பாடு செய்யப்பட்டதன் மூலம் ஆண்டிற்கான மிகை பற்றாக்குறையானதுடன் தேய்மான நிதியேற்பாடு அதிகரித்துமிருந்தது.

(ஈ) கணக்காய்வின் போதிலான கணிப்பீட்டின்படி, மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவினம் ரூபா 3,122,471 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் அதனை ரூபா 1,752,096 ஆகக் காட்டியமையால் மீளாய்வாண்டினது மிகை மற்றும் பணிக் கொடைக்கான நிதியேற்பாடடுக் கணக்கு மீதி என்பன முறையே ரூபா 1,370,375 கூடுதலாகவும் குறைவாகவும் கணிப்பிடப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்குரிய ஆராய்ச்சி புத்தகங்களது (Research Books) அச்சிடற் செலவினமாகிய ரூபா 114,000 முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,705,040 பெறுமதியான 5 வகைச் சொததுக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் செய்யப்படாமையால் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 373,411 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான மிகை மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது நிகர பெறுமதி என்பன அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,044,593 செலவினமானது முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது மிகையில் சீராக்கல் செய்யப்பட்டதால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டினது கொடுப்பனவு அனுப்பல் பத்திரத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் 12 சதவீத பங்களிப்பு ரூபா 5,907,230 ஆகும். எவ்வாறாயினும், ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 7,501,011 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 1,593,781 கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பின் கொடுப்பனவு ரூபா 1,475,814 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 1.356,698 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 119,116 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு செய்ய வேண்ய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புத் தொகையான ரூபா 122,086 கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது.

(ஒ) 2017 டிசெம்பர் மாத சம்பளத்தில் அறவிடப்பட்ட இடர் கடன் தவணைப் பணமாகிய ரூபா 162,612 இடர் கடன் முற்பணக் கணக்கிலிடப்படாததால், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் கடன் முற்பணக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின்போது முற்பணத்தைத் தீர்வு செய்வதற்குப் பயன்படுத்திய 22 ஆம் இலக்க நாட்குறிப்புக்குரிய ரூபா 395,205 இரு முறை கணக்கிலிடப்பட்டமை காரணமாக ஆண்டிற்கான செலவினம் அதேயளவு அதிகரித்தும் பெற வேண்டிய ஊழியர் முற்பணக் கணக்கு மீதி அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின்போது ஆணைக்குழு பெற்றிருந்த ரூபா 540,800 பெறுமதியான தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கிலிடப்படவில்லை.

(க) 2017 ஏப்ரல் மாத கால சம்பளக் கொடுப்பனவைக் கணக்கிலிடுவதற்கான 143 ஆம் இலக்க நாட்குறிப்பு பேரேட்டில் இரு முறை குறித்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக சம்பளமும் வேதனமும் ரூபா 4,707,763 மற்றும் குறித்த பொறுப்பும் வருமானக் கணக்கும் அதேயளவு கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தன.

மேலும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சம்பள மற்றும் வேதனச் செலவினம் ரூபா 47,807,117 ஆகுமாயினும், கணக்காய்வுக் கணிப்பின் பிரகாரம் அச் செலவினம் ரூபா 51,001,833 ஆகியமையால் மீளாய்வாண்டிற்கான சம்பள மற்றும் வேதனச் செலவினம் ரூபா 3,194,716 குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ங) 2017 மே முதல் டிசெம்பர் வரை நிரந்தர பதவியணியினருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,374,087 சம்பள கழிவானது நாட்குறிப்பின் மூலம் குறித்த கணக்குகளில் சீராக்கல் செய்யப்படாததால், குறித்த கழிவுக் கணக்கு அதேயளவு குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ச) 2017 சனவரி 01 தொடக்கம் நிலையான சொத்துத் தேய்மான நிதியேற்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியைச் சீராக்குவதற்கு 385 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் பேரேட்டில் கணக்கிலிடப்பட்ட ரூபா 775,620 நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட தேய்மானக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 23,627,595 பகுப்பாய்வுக் கட்டணத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய கட்டணங்களும் உள்ளடங்கியிருந்ததுடன், அது தொடர்பான குறித்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், தெரிவுச் செவ்வையின்போது 2017 ஒக்டோபரில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,906,715 பகுப்பாய்வுக் கட்டணத்தில் 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 932,965 உள்ளடங்கியமையால் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மீளாய்வாண்டிற்குரியதாகக் கணக்கிலிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ட) 2017 மே மாதத்திற்கான தலைவரின் மாதாந்தப் படியாகிய ரூபா 75,000 மற்றும் பகுப்பாய்வுக் கட்டணமாகிய ரூபா 12,300 என்பன காசேட்டிலும் குறித்த செலவினக் கணக்குகளிலும் மூன்று தடவைகள் குறித்துக் கொள்ளப்பட்டமை மற்றும் 12 காசோலைகளின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 196,300 செலவினம் காசேட்டிலும் குறித்த செலவினக் கணக்குகளிலும் இரு தடவைகள் வீதம் குறித்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக காசேட்டு மீதி ரூபா 370,900 குறைத்துக் கணிப்பிடப்பிடப்பட்டிருந்ததுடன் குறித்த செலவினம் அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டுமிருந்தது.

(ண) மீளாய்வாண்டின் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,149,142 நானாவித செலவினம் மீளாய்வாண்டின் சேர்ந்து நின்ற செலவினமாகக் கணக்கிலிடப்படாமையால், ஆண்டிற்கான மிகை மற்றும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சேர்ந்து நின்ற செலவினம் என்பன முறையே அதேயளவு அதிகரித்தும் குறைத்தும் கணிப்பிடப்பட்டிருந்தன.

(த) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உரித்துத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய பிற்போட்ட வருமான மானியக் கணக்கு நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 03 ஊழியர் கடன் கணக்கு மீதிகள் ரூபா 8,438,717 ஆகியபோதும், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலையின் பிரகாரம் அக்கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 6,431,601 ஆகியமையால் ரூபா 2,007,116 வேறுபாடு நிலவியது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் 10 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 74,172,354 ஆகுமாயினும் பேரேட்டின் பிரகாரம் அம்மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 68,234,831 ஆகியமையால் பரீட்சை மீதிக்கும் பேரேட்டுக் கணக்கிற்குமிடையே ரூபா 5,937,523 வேறுபாடு நிலவியது.

| | கணக்கீட்டு விடயம் | பரீட்சை மீதியின் படியான பெறுமதி | பேரேட்டின் படியான பெறுமதி |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 1. | ஆணைக்குழுக் கடன் | 1,012,319 | 950,875 |
| 2. | ஆணைக்குழுக் கடன் வட்டி | 39,772 | 43,491 |
| 3. | முற்பணம் | 259,000 | 9,000 |
| 4. | இடர்க்கடன் | 6,731,598 | 7,069,548 |
| 5. | இடர்க்கடன் வட்டி | 379,658 | 402,445 |
| 6. | விழா முற்பணம் | 694,800 | 679,800 |
| 7. | தேசிய தொழில்சார் தகைமைப் பரிசோதனைக் கட்டணம் | 10,623,090 | 10,625,089 |
| 8. | வங்கிக் கணக்கு (PB-12268324) | 4,208,448 | 1,219,682 |
| 9. | திருப்பிச் செலுத்த வேண்டிய மானியம் (டச் யுவர் பியுச்சர்) | 11,028,098 | 9,881,092 |
| 10. | திருப்பிச் செலுத்த வேண்டிய மானியம் (உலக வங்கி) | 39,195,571 | 37,353,809 |
| | மொத்தம் | 74,172,354 | 68,234,831 |

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் 09 கணக்கீட்டு விடயங்களது கூட்டுத் தொகை ரூபா 30,852,444 ஆகுமாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 32,830,312 ஆகியமையால் பரீட்சை மீதிகளுக்கும் நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 1,977,868 வேறுபாடு நிலவியது.

| | கணக்கீட்டு விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி | பரீட்சை மீதியின் பிரகாரமான பெறுமதி |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 1. | திரண்ட தேய்மானம் - கணனி | 21,484,361 | 20,924,366 |
| 2. | திரண்ட தேய்மானம் - அலுவலக உபகரணம் | 5,694,175 | 5,478,548 |
| 3. | ஆண்டிற்கான தேய்மானம் - கணனி | 3,044,802 | 2,484,807 |
| 4. | ஆண்டிற்கான தேய்மானம் - அலுவலக உபகரணம் | 977,267 | 761,642 |
| 5. | பகுப்பாய்வுக் கட்டணம் | - | 11,500 |
| 6. | நிதிசார் மானிய மாற்றக் கணக்கு | - | 6,000 |
| 7. | கொடுப்பனவு செய்ய வேண்டிய உழைக்கும்போதே செலுத்தும் வரி அறவீடு | - | 8,449 |
| 8. | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | 1,157,183 | 1,177,132 |
| 9. | டச் யுவர் பியூச்சர் நிகழ்ச்சித் திட்டம் (ஏனையவை) | 472,524 | - |
| | | 32,830,312 | 30,852,444 |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு முறையான இலக்கமிடப்பட்ட சகல கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மற்றும் உறுதிச் சான்று இலக்கம் என்பவற்றுடனான காசோலைகளின் அடியிதழைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால், நியாயபூர்வமானதும் போதுமானதுமான கணக்காய்வை மேற்கொள்ள முடியவில்லை. மேலும், காசேடு உள்ளடங்கலான பேரேட்டுக் கணக்குகள் முறையாகப் பேணப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளது பிழையற்ற தன்மையையும் பூரணத்துவத்தையும் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வங்கி கணக்கிணக்கம் முறையாகத் தயாரிக்கப்படாமையால் வங்கி கணக்கிணக்கங்களது பிழையற்ற தன்மையைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய மீதியுள் உள்ளடங்கிய 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 167,895 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 05 ஆண்டுகளைக் கடந்த ஏழு ஊழியர் கடன் மீதியாகிய ரூபா 117,140 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) | நிதிப்பிரமாணம் 272(1), (3) | நிதிப் பிரமாணத்தின்படி, குறித்த மாதம் முடிவடைந்து 6 வாரங்களுக்குள் அம்மாதத்திற்குரிய கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது 155 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபர் 15 ஆந் திகதியளவிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 341 | நிதிப்பிரமாணத்தின்படி அடியிதழ் சேர் புத்தகங்கள் பதிவேடு பேணப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 372 | ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்குமென வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 396 | 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள 07 மாதங்கள் தொடக்கம் 2 ஆண்டுகள் வரையிலான காலங் கடந்த ரூபா 1,321,122 பெறுமதியான 147 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 454(1) | நிறுவனம் பயன்படுத்தும் பட்டோலையிடப்பட்ட பொருட்கள் தொடர்பான அறிக்கைகளை உள்ளடக்கிய பொருட் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பின் பொருட்டு ஆணைக்குழு 2017 டிசெம்பர் 22 மற்றும் 2018 ஒக்டோபர் 04 ஆகிய தினங்களில் பொருட் கணிப்புச் சபைகளை நியமித்திருந்தபோதும், சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 நவெம்பர் 10 ஆந் திகதியளவிலும் ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவினது நிதிப் பெறுபேறு ரூபா 16,912,796 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,982 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 16,928,778 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 3,281,150 அதிகரித்தபோதும், அரசாங்க மீண்டுவரும் மானியம் ரூபா 12,088,546 மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 4,658,896 என அதிகரித்தமையே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 4,846,384 பற்றாக்குறையானது 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 16,912,796 மிகையாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிப்பெறுபேற்றில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 39,198,869 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 87,726,750 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

நிதியைத் திருப்பி பெறும் நோக்கில் ஆணைக்குழு தனி நபர்களுக்கு எதிராக ஒரு வழக்கையும் வெளி நபர்கள் ஆணைக்குழவிற்கு எதிராக ஒரு வழக்கையும் தொடுத்திருந்தபோதும் நிதிக் கூற்றுக்களில் இவை தெரிவிக்கப்படவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 - 2018 காலப்பகுதிக்கென ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டிற்கேற்ப நாளதுவரையாக்கப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கென ஆணைக்குழு தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளது முன்னேற்றத்தை தெரிவிக்கும் விதத்தில் செயலாற்றல் அறிக்கையை தயாரித்திருக்க வேண்டுமாயினும், அதற்கமைய செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழை வழங்குவதற்கான முறையாக ஆணைக்குழு அறிமுகம் செய்திருந்த தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழை (NVQ) வழங்கும் முறையை மேற்பார்வையிடலும் பரிசீலனை செய்வதும் ஆணைக்குழுவின் பிரதான கடமையாகும். எனினும், ஆணைக்குழுவிடம் அதற்கான போதிய வளங்கள் இல்லாமையால் மதிப்பாய்வாளர்களை நியமதித்தல், மதிப்பாய்வு செய்தல், மதிப்பாய்வாளர்களுக்குக் கொடுப்பனவை மேற்கொள்ளுதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய பல கால கட்டங்களிலும் தாமதம் நிலவியது. மேலும், NVQ சான்றிதழ் வழங்கும் மேற்பார்வை நடவடிக்கைகள் அதன் காரணமாகப் போதியளவு நடைபெறாமை பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(i) 2017 ஆம் ஆண்டில் புதிதாக அரச துறையில் 150 தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் 210 தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் என 360 நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான மதிப்பாய்விற்கு திட்டமிடப்பட்டபோதும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முறையே 37 மற்றும் 173 என 210 நிறுவனங்கள் மாத்திரமே மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, அடையப் பெற்ற ஒட்டுமொத்தச் செயலாற்றல் 58 சதவீதம் மாத்திரமே.

(ii) 2017 ஆம் ஆண்டில் அரச துறையால் நடாத்தப்படும் 400 தொழில்சார் பயிற்சிக் கற்கை நெறிகளையும் தனியார் துறையினரால் நடாத்தப்படும் 100 தொழில்சார் பயிற்சி கற்றை நெறிகளையும் சேர்த்து 500 கற்கை நெறிகளை புதிய தராதர அங்கீகாரத்துக்காக மதிப்பாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முறையே 195 மற்றும் 78 என 273 கற்கை நெறிகள் மாத்திரமே பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, அடையப் பெற்ற ஒட்டுமொத்தச் செயலாற்றல் 55 சதவீதமாகும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் 02 சஞ்சிகைகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஒரு வார சஞ்சிகை மாத்திரமே அச்சிட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) நிபுணத்துவத் துறை அபிவிருத்திச் செயற்திட்ட நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது 90 பயிற்சி நிலையங்களுக்கான முகாமைத்துவ நிலைமை முறைமையை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் போது 65 நிலையங்கள் மாத்திரமே நிறுவப்பட்டிருந்தன.

(ஈ) 2014 - 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட செயல் நடவடிக்கைத் திட்ட இலக்கின் பிரகாரம், நிர்மாண வேலைகள், தகவல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம், இலகு பொறியியலும் உற்பத்தியும் மற்றும் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா எனும் துறைகளுக்கு 4 நிபுணத்துவ மன்றங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைக்கப்பட்டிருந்தன. அவை தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மூன்று நிபுணத்துவ மன்றங்களின் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா 11.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தபோதும், அவற்றுடன் தொடர்புடைய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் செயலாற்றல் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படாமை.

(ii) மன்ற நடவடிக்கைகள் அமைச்சினாலோ அல்லது நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டங்களாலோ மேற்பார்வை செய்யப்படாமை.

(iii) வியாபாரத் திட்டத்திற்கமைய, அம்மன்றங்கள் ஆரம்பமாகிய ஆண்டு தொடக்கம் வருமானத்தை ஈட்ட வேண்டுமாயினும், அவ்வாறானதொரு விதிமுறை கடைப்பிடிக்கப்படாமை.

(iv) பிணை வரம்புக்குட்பட்ட கம்பனிகளாக இயங்கும் இந்நிறுவனங்களது வருடாந்த கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்வின் பொருட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குரிய கட்டிடத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்கு மேலதிக இட வசதி பெறப்படும் நோக்குடன் அதன் எட்டாவது மாடியைப் பொருத்தமானவாறு தயாரிப்பதற்கு 2016 நவம்பர் 24 ஆந் திகதியன்று ஒரு மாத ஒப்பந்த அடிப்படையில் ரூபா 6,575,375 பெறுமதியில் ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) எட்டாவது மாடியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை, எட்டாவது மாடியை ஆணைக்குழுவினது நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தமாக அமைச்சுக்கும் ஆணைக்குழுவிற்குமிடையே கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதியளவிலும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை.

(ii) உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த முதல் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்த காலத்தில் முடிவடையாதிருந்ததுடன் 142 நாட்கள் தாமதித்து 2017 மே 23 ஆந் திகதியன்று ஒப்பந்தம் நிறைவேறியிருந்தது. ஒப்பந்தக்கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதன் பொருட்டு தாமதக் கட்டணமாக ரூபா 466,856 அறவிடப்பட்டிருக்க வேண்டுமாயினும், ரூபா 144,658 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமை.

(iii) எட்டாவது மாடி அபிவிருத்திக்கான ஆரம்ப வேலைகள் நிறைவடையாததால் அதில் உள்ளடங்காத பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக 2017 செப்டெம்பரில் மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. எனினும், மதிப்பாய்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த கூறு விலையான ரூபா 6,552,695 க்கு ஒப்பந்தம் வழங்கப்படாது மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய, ரூபா 7,628,324 பெறுமதியிலான ஒப்பந்தத்தை 90 நாட்களுக்குள் நிறைவேற்றுவதற்கு அவ்வொப்பந்தம் 2017 திசெம்பர் 29 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது.

(iv) 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் எட்டாவது மாடியின் இரண்டு கட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு ரூபா 9,769,691 செலவிடப்பட்டிருந்த போதும், ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடியவாறு பொருத்தமான மட்டத்தில் அம்மாடி இல்லாதிருந்தமையால் மீண்டும் முற்றாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகம் (CECB) ஆணைக்குழுவிற்கு 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதிய தனது அறிக்கையின் மூலம் அறிவித்திருந்தது.

(v) 2018 மார்ச் 02 ஆந் திகதிய பிரதிப் பணிப்பாளரது கடிதத்தின் பிரகாரம் மழைநீர் கசிவதால் எட்டாவது மாடியிலிருந்த ஆணைக்குழுவுக்குரிய உபகரணங்களும் ஆவணங்களும் பாதிப்படைந்திருந்ததுடன், இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் 02 அலுவலக மேசைகளுக்கு ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 22,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் அத்தியாயத்தினது 14(1) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படாது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் திட்டத்திற்கென நிறுவனங்கள் அமைக்கப்படுதல், முகாமைத்துவமிடப்படல், நடாத்தப்படுதல் அல்லது நிர்வகிக்கப்படுதல் என்பன மேற்கோள்ளப்படலாகாதெனினும், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம், தீவின் ஒட்டுமொத்த தொழில்சார் பயிற்சி நிறுவனங்களது எண்ணிக்கை 2,701 ஆகியதுடன், ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களது எண்ணிக்கை 1,080 அல்லது 40 சதவீதம் வரையாக அமைந்திருந்தது. முறைப்படி 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனங்கள் தமது பதிவை புதுப்பித்திராமையால் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2017 ஒக்டோபர் 01 ஆந் திகதியளவில் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனங்களது எண்ணிக்கை 692 வரை குறைவடைந்திருந்தது. பணிப்பாளர் நாயகத்தினது பதிலுக்கமைய, அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாததால் பதிவு செய்யப்படாத மற்றும் புதுப்பிக்கப்படாத பயிற்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் அத்தியாயத்தினது 15(1) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படாது எந்தவொரு தொழில்சார் மற்றும் அல்லது தொழில்சார் கல்விக்கான குறிப்பிடத்தக்க கற்கை நெறிகளை நடாத்தல் ஆகாது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியொன்றின் பிரகாரம் ஆணைக்குழுவினது தேசிய நிபுணத்துவ தகைமை மட்டத்தையுடைய கற்கை நெறிகளுக்கு பதிவாகிய எண்ணிக்கை 2,442 ஆகும். முறைப்படி 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை கற்கை நெறிகளுக்கான பதிவுகளைப் புதுப்பிக்காமையால் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2017 ஒப்டோபர் 01 ஆந் திகதியளவிலும் பதிவு செய்யப்பட்டிருந்த கற்கை நெறிகளது எண்ணிக்கை 1,625 வரை குறைவடைந்திருந்ததுடன், சகல பயிற்சி நிறுவனங்களையும் கற்கை நெறிகளையும் பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட விதி முறைகளை நிறுவனம் கடைப்பிடிக்காமையே இதற்கான காரணமாக அமைந்தது.

(ஈ) அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் கட்டளைகள் அல்லது சட்டங்கள், பயிற்சி நிறுவனங்களாலும் பயிற்றுவிக்கப்படுவர்களாலும் கடைப்பிடிக்கப்படுவதை நிறுவன ரீதியான பரிசீலனைகளின் மூலம் உறுதி செய்வதற்குப் போதுமான பதவியணியினர் ஆணைக்குழுவில் இல்லாதபோதும், 50 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் மூலம் அப்பணியை நிறைவேற்றுவதற்கு இந்த அதிகாரச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையின் பரிசோதகர்களை ஆட்சேர்த்திருந்தபோதும், அவர்களின் மூலமேனும் அப்பரீசீலனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை.

(உ) நிறுவனத்தின் கணனி முறைமை 2017 மே 09 ஆந் திகதி தொடக்கம் செயலற்றுப் போனமை மற்றும் அதனுடன் தொடர்புடைய தரவுகளின் களஞ்சியம் (Back-ups) வைத்திருக்கப்படாமை சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கு ஆணைக்குழு கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்டெம்பர் மாதமளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் தற்போது நடாத்தும் கற்கை நெறிகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவக் கற்கை நெறிகளாக முன்னேற்றுவதற்கு ஆணைக்குழுவால் நிதியளிக்கப்படும் செயல் அமுலாக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டில் 03 அரச துறை நிறுவனங்களுக்குரிய 104 நிலையங்கள் நிதி உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தன. அவற்றுள் இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் 03 நிலையங்களது 06 கற்கை நெறிகளுக்கு மாத்திரம் 382 உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின்போது எந்தவொரு அரசாங்க அல்லது இடருக்குள்ளான பிரிவினருக்கும் நிதி உதவி வழங்கப்படவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டில் கற்கை நெறி அபிவிருத்திக்கென நிதி உதவியைப் பெறுவதற்கு 52 தனியார் நிறுவனங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன. எனினும், அதில் ஒரு தொழில்சார் பயிற்சி நிறுவனத்திற்கு மாத்திரம் ரூபா 2,686,526 நிதி உதவியளிக்கப்பட்டிருந்தது.

(iii) இனங்காணப்பட்ட கற்கை நெறிகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவத்துக்கமைய தராதர அங்கீகாரம் வழங்குவதன் மூலம் அவற்றைத் தேசிய தொழில்சார் தகைமை மட்டத்திற்கு இட்டுச் செல்வதே அரச மற்றும் தனியார் துறை தொழில்சார் பயிற்சி நிதி உதவி வழங்கும் நோக்கமாகும். எனினும், 2012 முதல் 2016 வரை 18 கற்கை நெறிகளுக்கு ரூபா 3,285,890 நிதியுதவி வழங்கப்பட்டிருந்தபோதும், அப்பயிற்சிக் கற்கை நெறிகளில் எதுவுமே கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபர் 05 ஆந் திகதியளவிலும் தராதர அங்கீகாரத்திற்குள்ளாகவில்லை.

(iv) 2011 முதல் 2014 வரை கற்கை நெறிகளை தராதர அங்கீகாரப்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு ஆணைக்குழு வழங்கிய நிதியுதவி ரூபா 10,427,342 ஆகும். அது குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் கணக்குகளில் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) தேசிய தொழில்சார் தகைமை (NVQ) கற்கை நெறிகள் நடாத்தப்படும் தொழில்சார் பயிற்சி நிலையங்களது நிலைமையைச் சான்றுறுதிப்படுத்தும் நிலைமை முகாமைத்துவ முறைமையை ஏற்படுத்தும் தேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும். அதற்கென 2017 ஆம் ஆண்டின்போது ரூபா 04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இருபது உள்ளக உத்தியோகத்தர்களும் 13 வெளியக உத்தியோகத்தர்களுமாக 33 நிலைய முகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் பிரதான கணக்காய்வாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், வெளியக உத்தியோகத்தர்களைக் கணக்காய்வாளர்களாக ஆட்சேர்க்கும்போது தேவையான தகைமைகளுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்கள் இனங்காணப்பட்டிராததுடன் அதில் 10 உத்தியோகத்தர்கள் கணக்காய்வு நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபட்டிருக்கவுமில்லை.

(ii) உள்ளக உத்தியோகத்தர்களில் 06 பேர் 27 முதல் 35 தவணையாகக் கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 14 பேர் 1 முதல் 16 தவணைகளிலான கணக்காய்வு நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டமையும் உள்ளக உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடப்படுகையில் வெளியக உத்தியோகத்தர்கள் குறைவாகவே கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 ஆம் ஆண்டில் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையும் தேசிய பயிலுனர் பயிற்சி அதிகாரசபையும் இம்முறையில் உட்புகுவதற்காக ரூபா 25.83 மில்லியனைச் செலவழித்து முன்கூட்டியே தயாராகியபோதும், அந்நிலையங்களை ஆணைக்குழு கணக்காய்வு செய்யவில்லை.

(iv) முகாமைத்துவ நிலைமை முறைமையை உருவாக்குவதற்கான முறையான விதி முறைகள் மற்றும் அம்முறைமையைக் கணக்காய்வு செய்வதற்கான நிறுவனங்களைத் தெரிவு செய்வதல், கணக்காய்வு உத்தியோகத்தர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகள் தெளிவுற நடைபெறுவதை உறுதி செய்வதற்கான விதி முறைகள் அறிமுகஞ் செய்யப்படவில்லை.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய, ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையால் 2015 முதல் 2017 வரையான 03 ஆண்டுகளின்போது நிலைமையைச் சான்றுறுதிப்படுத்தும் கட்டணத்தை மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 50,000, ரூபா 25,000, ரூபா 7,500 என மாற்றஞ் செய்திருந்தது.

(vi) முகாமைத்துவ நிலைமை முறைமையை உருவாக்குவதற்கு, கணக்காய்வு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் உள்ளக உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படி, தங்குமிட படி, முதல் நாள் படி என முறையே நாளொன்றிற்கு ரூபா 3,500, ரூபா 2,000, ரூபா 500 எனும் வீதப்படி தாபன விதிக்கோவையின் XIV அத்தியாயத்தினது 4.5 ஆம் பந்திக்கு முரணாக கொடுப்பனவு செய்திருந்ததுடன், அதற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ரூபா 2,150,000 கிரயமுடைய மோட்டார் வாகனமொன்று 2017 செப்டெம்பர் 18 தொடக்கம் செயற்படாதிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமான 2018 ஒக்டோபர் 25 ஆந் திகதியளவிலும் அது பழுதுபார்க்கப்படாது இருந்தது.

### 4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 116 ஆகியபோதும், உள்ளவாறான பதவியணி 96 ஆகவிருந்தது. அவற்றுள் அத்தியாவசிய பதவிகளான பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவி, 02 பணிப்பாளர் பதவிகள், 04 பிரதிப் பணிப்பாளர்கள் பதவிகள் என்பன இருந்தன.

(ஆ) நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் முறையான விதி முறைகளுக்குப் புறம்பாக, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத ஒருங்கிணைப்பு மறுசீரமைப்பு மற்றும் பயிற்சி அபிவிருத்திப் பதவிகளுக்கு 218/18 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கமைய, 2017 ஒக்டோபர் 01 முதல் 2018 ஒக்டோபர் 21 வரையான குறுகிய காலத்தினுள் பல சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 714,665 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.6 நிதியப் பயன்பாடு**

சர்வதேச தொழில் ஸ்தாபனத்திடமிருந்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 3,300,000 பணிப்பாளர் சபையினதோ திறைசேரியினதோ அங்கீகாரமின்றியும் ஆணைக்குழவினது நோக்கத்திற்கு முரணாகவும் 03 நிலையான வைப்புக்களில் இடப்பட்டிருந்தன.

**5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி**

**5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்**

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான ''நிகழ்ச்சி நிரல்'' என்பவற்றின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் ஆணைக்குழு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளில் எவ்வாறு ஈடுபடுவது என்பதை அறிந்திருக்கவில்லை. அதன் காரணமாக, தனது பணிகள் தொடர்பாக நிலைத்து நிற்கவல்ல நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடையும் விதம், இலக்கை அடையப் பெற்றதை அளவிடுவதற்கான சுட்டுக்களை இனங்கண்டிருக்கவுமில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டுமாயினும், ஆணைக்குழுவினது 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 190 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 நவெம்பர் 07 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினரது எண்ணிக்கை 05 ஆகும். எனினும், அதில் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்ததால் மீளாய்வாண்டின்போது போதியளவு கணக்காய்வு நடைபெறவில்லை. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நான்கு பேருமே மேற்பார்வை மட்டத்திலமைந்ததால் ஆண்டின்போது 2 உத்தியோகத்தர்கள் உள்ளவாறு மேற்பார்வை மட்டத்திலேயே பணியாற்றியிருந்தனர்.

**6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்துடன் இணக்கம் செய்யப்படுகையில் 20 முதல் 148 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 4.4 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவச் சேவை தரப் பதவிக்கு விண்ணப்பிக்கும் உள்ளக விண்ணப்பதாரர் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 1 ஆம் தரத்தில் 5 ஆண்டு கால திருப்திகர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். எனினும், கீழ் முகாமைத்துவ மட்டத்தில் குறித்தவாறு சேவைக்கால அனுபவத்தை பூர்த்தி செய்திராத 06 உள்ளக உத்தியோகத்தர்கள் உதவிப் பணிப்பாளர் பதவிகளில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், புள்ளி வழங்கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டபோதும், வேறு தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் சகல விண்ணபப்பதாரருக்கும் நியாயமாக நடக்கும் விதத்தில் நேர்முகப் பரீட்சைச் சபையால் புள்ளிகள் வழங்கப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவினது பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | புதிய கணனி கணக்கீட்டு முறைமையில் 2017 ஆம் ஆண்டிற்கான சகல உறுதிச் சான்றுகளும் உள்ளடக்கப்படாமை. |
| | (ii) | 2017 மே மாதத்தில் கணனிக் கணக்கீட்டு முறைமை செயலற்றுப் போனதால் தரவுகள் முறைமையாகக் களஞ்சியப்படுத்தப்படாது, (Back up) அதன் காரணமாக கணனித் தரவு முற்றாக அழிவுக்குள்ளானமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | (i) | நிபுணத்துவத் துறை சார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை. |
| | (ii) | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தவறின்றித் தயாரிக்காமை. |
| (இ) மனிதவள முகாமைத்துவம் | | மதிப்பாய்வாளர்களது தேவையை மதிப்பிடாமை, ஆட்சேர்ப்பு மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளல் என்பவற்றிற்குப் போதிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்யாமை. |
| (ஈ) ஆவணங்களது பாதுகாப்பு | | கணக்காய்விற்கு உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பிக்கும்போது உறுதிச் சான்றுகள் நிலுவையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் பரிசீலிக்கப்படாமை, உறுதிச் சான்றுகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை என்பன. |